# பக்தி மரபைக் காப்பியக் கட்டமைப்பில் கொண்டு வருவதில் சேக்கிழாரின் வகிபங்கு: பெரியபுராணப் பிரதியை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

**முருகையா சதீஸ்**[1]


## ஆய்வுச்சுருக்கம்:

*தமிழகப் பண்பாட்டு மரபுகளைப் புலப்படுத்தும் சைவத்தமிழ் இலக்கியங்களுள் பெரியபுராணம் தனிச்சிறப்புடையது. இப்பண்பாட்டுப் பனுவலைப் படைத்தவர் அருண்மொழித்தேவர். தமிழ் நாட்டில் பல்வேறு இடங்களில், வெவ்வேறு காலங்களில் வாழ்ந்த தனியடியார்கள் அறுபத்து மூவரும் தொகையடியார்கள் ஒன்பது பேருமாக மொத்தம் எழுபத்திரெண்டு திருத்தொண்டர்களின் வரலாற்றையும், மகிமையையும் கூறுகிறார். இதனைச் சேக்கிழார் இரு காண்டங்கள், பதின்மூன்று சருக்கங்கள், எழுபத்தெட்டுப் புராண உட்பகுப்புக்கள், நாலாயிரத்து இருநூற்று எண்பத்தாறு விருத்தங்களாகக் கட்டமைத்துள்ளார். சிவனடியார்களின் வரலாற்றினை ஊர்தோறும் தேடிச்சென்று பக்தி சார்ந்த வரலாற்றுக் காப்பியமாகப் பதிவு செய்வதிலும், தமிழகப்பண்பாட்டை முதன்மைப்படுத்துவதிலும் சேக்கிழார் வெற்றி பெற்றுள்ளார். "உலகெலாம் உணர்ந்து'' என்று தொடங்கும் கடவுள் வாழ்த்துடன் காவியத் தொடக்கத்தை ஏற்படுத்தி அறம், பொருள், இன்பம், வீடு என்றவகையில் சுந்தரரின் வாழ்வியலைக் காட்டுகிறார். வருபொருள் உரைத்தல் எனும் நிலைப்பாட்டில் அடியார்களின் வரலாற்றை வெளிப்படுத்திப் பாவிக மரபு குறையாமல் காப்பியத்தைக் கட்டமைக்கிறார். உலகியல் இன்பங்களை ஆன்மிகத்தோடு இணைத்துப்பாடும் மரபும் இங்கு முக்கியமானது. காதல், மணம், முடிசூட்டு, தூது, போர், வெற்றி உள்ளிட்ட பல விடயங்களைக் கூறி, காவியத்திற்குரிய புதுமையான மற்றும் பொதுமையான பண்புகளையும் அறிமுகப்படுத்துகிறார். இது இலக்கியச் சிறப்புக்களை உடையதாய், கற்பனை வளம், வர்ணனைச் சிறப்பு, சொல்லாட்சி, அணிகள் என்பவை ஒருமிக்கும் காப்பியமாகப் படைப்பதில் சேக்கிழார் வெற்றி பெறுகிறார். தமிழ்நாட்டுச் சமூகப் பின்புலத்துடன் வரலாற்றுப் போக்கில் இக்காப்பியத்தைப் படைத்தாலும், மும்மலக்கொள்கை, வினைக்கொள்கை, இருவினையொப்புக் கொள்கை, சமயப்பண்பாடு, திருக்கோயில் வழிபாடு, குருலிங்க சங்கம வழிபாடு, கல்வி மரபுகள், கலைமரபுகள் உள்ளிட்ட சைவப்பண்பாட்டு மரபுகளையும் வெளிப்படுத்தித் தான் கூறவந்த காப்பிய நோக்கத்தை (முத்தியின்பம்) அடியார்களின் வாழ்க்கை நெறிமூலம் எடுத்தியம்பிச் சைவதத்துவ உண்மையையும் நிலைபெறச் செய்துள்ளார். இதனால், சைவ பக்தி மரபைக் காப்பியக் கட்டமைப்பில் கொண்டுவருவதில் சேக்கிழாரின் புலமைத்துவம் எத்தகையது என்பதை ஆராயவேண்டிய தேவை உள்ளது. எனவே சேக்கிழாரின் பெரியபுராணப் பிரதியை வாசிப்பிற்கு உட்படுத்தி அவரின் காப்பியத்திறனை மதிப்பீடு செய்து ஆவணப்படுத்தும் நோக்கில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த ஆய்வானது பண்புசார் முறைமையைக் கொண்டமைந்து, விபரணப் பகுப்பாய்வு முறை, இரசனை முறைத்திறனாய்வு ஆகிய அணுகுமுறைகளைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த ஆய்விற்குச் சேக்கிழாரின் பெரியபுராணப் பிரதி முதன்மைத் தரவாகப் பயன்படுத்தப்பட்டுள்ளதுடன், துணை நிலைத்தரவுகளாக ஆய்வுத்தலைப்புடன் தொடர்புடைய நூல்கள், கட்டுரைகள், இதழ்கள், மின்னூடகக் கருத்துக்கள் போன்றவையும் பயன்படுத்தப்பட்டுள்ளன. இலக்கியப் படைப்பாளிகளை முன்னிறுத்தி இதுபோன்ற மேலும் பல ஆய்வுகள் ஆய்வாளர்களால் முன்னெடுக்கப்படவேண்டும் என்றும் இந்த ஆய்வு பரிந்துரை செய்கின்றது.*


**திறவுச்சொற்கள்:** பெரியபுராணம், பக்தி மரபு, காப்பியக் கட்டமைப்பு, சேக்கிழார், வகிபங்கு.

[1]*தமிழ்த்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.*
satheesmurukaiya@gmail.com

## அறிமுகம்

தமிழகப் பண்பாட்டு மரபுகளை நன்கு புலப்படுத்தும் சைவத்தமிழ் இலக்கியங்களுள் பெரியபுராணம் என வழங்கும் திருத்தொண்டர் புராணம் தனிச்சிறப்புடையது. பன்னிரு திருமுறைகளுள் பன்னிரண்டாம் திருமுறையாக வகுக்கப்பட்டுள்ள இப்புராணம் சிவனடியார்களின் வாழ்வியலையும், சைவப்பண்பாட்டையும் புலப்படுத்தும் சைவத்தமிழ்க் காப்பியமாகத் திகழ்கிறது. தென்னாட்டில் பக்தி இயக்க காலத்தில் தோன்றிய இப்பக்திக் காப்பியம், சைவ நாயன்மார் அறுபத்து மூவரின் அருஞ்செயல்கள் குறித்த வாழ்க்கை வலராறுகளைப் பேசுகிறது. ஒன்பது வகையான தொகையடியார்களின் திருத்தொண்டுகளை இயம்புகின்றது. இப்பண்பாட்டுப் பனுவலை அருண்மொழித்தேவர் எனும் சேக்கிழார் படைத்துள்ளார். அடியார்களின் அற்புத வரலாற்றையும், திருவருட்பெருமையையும் கூறும் தெய்வீகக் காப்பியம் இது. இறைவனிடம் நீங்காத அன்பு கொண்டு நிலையான பேரின்பப் பெருவாழ்வைத் தேடிக்கொண்ட அடியார்களின் வரலாற்றை உரைக்கும் திவ்விய சரித்திரமாகும். பக்தி நனிசொட்டச் சொட்ட அமைவுறும் இக்காப்பியம் இறைவன்மீது கொண்ட பக்தியைத் தொண்டர்கள் வாயிலாக சேக்கிழார் எடுத்துரைப்பதாக அமைகின்றது. இதனால் பக்தியனுபவத்தைக் காப்பியப்படுத்துவதில் சேக்கிழாரின் திறன் எத்தகையது என்பதை இவ்வாய்வு ஆராய முற்படுகின்றது.

## ஆய்வு நோக்கமும், ஆய்வு முறையியலும்

சேக்கிழாரின் பெரியபுராணப் பிரதியை வாசிப்பிற்கு உட்படுத்தி அவரின் காப்பியத் திறனை மதிப்பீடு செய்து ஆவணப்படுத்தும் நோக்கில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வானது பண்புசார் முறைமையைக் கொண்டமைந்து, விபரணப் பகுப்பாய்வு முறை, இரசனைமுறைத்திறனாய்வு ஆகிய அணுகுமுறைகளைப் பயன்படுத்தி மேற்கொள்ளப் பட்டுள்ளது. இவ்வாய்விற்குச் சேக்கிழாரின் பெரியபுராணப் பிரதி முதன்மைத் தரவாகப் பயன்படுத்தப்பட்டுள்ளதுடன், துணை நிலைத்தரவுகளாக ஆய்வுத்தலைப்புடன் தொடர்புடைய நூல்கள், கட்டுரைகள், இதழ்கள், மின்னூடகக் கருத்துக்கள் போன்றவையும் பயன்படுத்தப் பட்டுள்ளன.

## காப்பியத் தலைப்பும், காப்பிய மூலங்களும்

பெரியபுராணத்தின் ஆசிரியரான சேக்கிழார், தான் இயற்றிய காப்பியத்திற்குத் திருத்தொண்டர் புராணம் என்றே பெயரிட்டுள்ளார். அது சைவ அடியார்களின் வாழ்க்கை வரலாறு என்ற கருத்தினை உடையதாகும். சேக்கிழார் இதனை ‘மாக்கதை’ என்று குறிப்பிட்டதை எடுத்துக்காட்டிச் சான்றோர்கள், பெரியபுராணம் என்பது சரியானது என்று கூறுகின்றனர். அடியார்களின் வியத்தகு செயலைக் கூறுவதாலும், நாயன்மார்கள் ஒவ்வொருவரின் வாழ்க்கையைத் தனித்தனிப் புராணமாக எடுத்துரைத்து, அப்புராணங்கள்

எல்லாம் காப்பியத்தில் சேர்ந்து இயைவதாலும் இக்காப்பியம் பெரியபுராணம் ஆயிற்று எனப் பெயர்க்காரணத்தைக் குறிப்பிடுவர் (கண்ணப்பமுதலியார், 2017:102). பெரியபுராணக் காப்பியத்தைப் பாடச் சேக்கிழாருக்குச் சுந்தரமூர்த்தி நாயனாரின் திருத்தொண்டர்தொகையும், நம்பியாண்டார் நம்பியின் திருத்தொண்டர் திருவந்தாதியும் ஆதாரமாக அமைந்தன. அதுமட்டுமல்லாமல் தேவார முதலிகளின் பாடல்கள், திருமூலரின் தமிழாகமம், காரைக் காலம்மையின் பாடல்கள், கழறிற்றறிவார் நாயனார் பாடல்கள், ஐயடிகள் காடவர்கோனின் பாடல்கள் முதலியனவும் சேக்கிழார் இக்காப்பியத்தைப் படைப்பதற்குத் துணைநின்றன. இவற்றுக்கும் மேலாகப் பழந்தமிழ்க் கல்வெட்டுக்கள், செப்பேடுகள், சரித்திர வரலாறுகள் முதலியவையும் துணைநின்றன. (பரமசிவம், சொ., 1987:31).

**பெரியபுராணம் எழுந்தமைக்கான பின்புலம்**

பெரியபுராணம் சோழப்பேரரசின் ஒடுங்குதிசைக் காலத்தில், கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டில் தோன்றிய சைவக்காப்பியமாகும். பக்தி நெறியின் பயனையும், திருத்தொண்டின் சிறப்பினையும் மீண்டும் மக்களுக்கு நினைவூட்டவேண்டிய காலச்சூழ்நிலை சேக்கிழார் காலத்தில் நிலவியது. குறிப்பாகச் சோழர்காலத்தில் நிலவிய சமயப் பொறையைச் சாதகமாகப் பயன்படுத்தி அவைதிக மதத்தினர் தம் மதத்தினை நிலைப்படுத்தப் பெருமுயற்சி செய்தனர். அதன் விளைவாகச் சமண தத்துவ உண்மைகளைப் பரப்பும் பொருட்டுத் திருத்தக்கதேவர் சீவகசிந்தாமணியைப் படைத்தார். இது வெளிப்படையாகக் காமச்சுவை நிரம்பியதான உலகியல் இன்பங்களைப் பேசுவதாக இருந்தாலும், பூடகமாகச் சமண தத்துவங்களைப் பேசுவதாக அமைந்துள்ளது. அக்காலத்தில் மக்கள் உலகியல் இன்பங்களின் மேல் கொண்ட பற்றால் சீவக சிந்தாமணியை விரும்பிப் படிக்கத் தொடங்கினர். இதன் காரணமாக சமணக் காப்பியமான சீவகசிந்தாமணியின் செல்வாக்கு மக்களிடம் நன்கு வேரூன்றத் தொடங்கியது.

மக்கள் மட்டுமன்றி அநபாய சோழனும் அதை மீண்டும் மீண்டும் படித்துப்பெரு விருப்புக் கொண்டவனாய் ஓதியும், ஓதுவித்தும் மகிழ்ந்து வந்தான். அதன்பால் அளவு கடந்த மோகம் கொண்டிருந்த அநபாயச் சோழனைக் கண்ட சேக்கிழார் பெரிதும் மனவேதனைப்பட்டு, மன்னன் சமணத்தை நாடிவிடுவான் என அஞ்சி, மன்னனின் கவனத்தைச் சீவகசிந்தாமணியில் இருந்து மீட்க எண்ணி, சைவ நாயன்மார்களதும், சிவனடியார்களதும் பெருமைகளையும், அற்புதங்களையும் கூறினார். இதன் மூலம் “சிறப்பு மிக்க சிவகதையே இம்மைக்கும், மறுமைக்கும் உறுதிபயக்கத்தக்கது” என்பதை நம்பவைத்தான். மன்னனும் நாயன்மார்களின் வரலாற்றுக் கதைகளின்பால் விருப்புக் கொண்டு, அவர்களின் வரலாற்றைத் தொகுத்து ஒரு புத்தகமாகத்தரச் சேக்கிழாரை வேண்டினான். சேக்கிழாரும் தமிழகம் முழுவதும் அலைந்து திரிந்து, அடியவர்களின் வரலாறுகளைத் தேடித்தொகுத்து, மன்னனின் ஆதரவோடு அதை

அரங்கேற்றம் செய்தார். இவ்வாறு ஒரு காலகட்டச் சமூகத் தேவையின் பொருட்டு எழுதப்பட்ட காப்பியமே பெரியபுராணமாகும். திருத்தக்கதேவர் சீவகசிந்தாமணியைக் காலமறிந்து எழுதினாரோ, அதேபோலத் தக்க நேரமறிந்து சேக்கிழார் பெரியபுராணத்தைப் படைத்தார். சுருக்கமாகச் சொல்லப்போனால் வீழ்ச்சிப்பாதையில் விரைந்து சென்றுகொண்டிருந்த சோழப்பேரரசை மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டு சென்று, வைதிகப்பண்பாட்டு விழுமியங்களை மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டுவர இறுதியாகச் செய்த முயற்சியின் விளைவுதான் பெரியபுராணமாகும். (வேதநாதன்.மா, 2011:04).

## சேக்கிழாரின் காப்பியத்திறன்

காப்பிய வகையில் கூட்டுத் தலைமையைப் படைத்துக்காட்டிய முதல் தமிழ்க் காப்பியக் கர்த்தா சேக்கிழாரே ஆவார். கதை, கதைமாந்தர், கதை நிகழிடம் போன்ற கூறுகளைத் தமிழகத்தைச் சேர்ந்தவையாகப், பண்பாட்டோடு இணைத்துப் படைத்துள்ளார். ஒன்பான் சுவையைக் கடந்து பக்தி என்னும் புதுச்சுவையைக் காப்பியத்தின் தலைமைப் பண்பாக்கியுள்ளார். பக்திச் சுவையைத் தலைமைப் பொருளாகக் கொண்டிருப்பினும் தொண்டர்களைப் புறக்கணித்து இறையன்பைப் பெற இயலாது என்பதைக் காட்டும் காப்பியமாகப் படைத்துள்ளார். ஆண்டி முதல் அரசன் ஈறாக, திருக்குலத்தார் முதல் அந்தணர் ஈறாக அனைவரும் சமம் என்பதைக் காட்டிச் சமுதாய ஒருமைப்பாட்டை வற்புறுத்தியுள்ளார். இக்காப்பியம் ஒரு குறிப்பிட்ட காலச் சமூகத்தேவையை நிறைவுசெய்யும் பொருட்டுத் தோன்றினாலும், அதைக்காப்பியக் கட்டமைப்புக்குள் கொண்டுவந்து பாடுவதில் சேக்கிழார் பெரும் சிக்கல் அடைந்திருப்பார். ஏனெனில் சிவனடியார்களின் ஊர் தோறும் சென்று, அவர்களைப் பற்றிய தகவல்களைச் சேகரித்து, அவர்களின் வரலாறுகளைப் பக்தி மரபில் கொண்டுவந்து, காப்பியக் கட்டமைப்பில் தமிழ்ப்பண்பாட்டுப் பிரதிபலிப்பாக, வரலாற்றுக்காவியமாகப் படைத்துள்ளார். அத்தகைய தனித்துவங்களை ஆராய்வது அவசியம்.

## வரலாற்றுக் காப்பியமாக்குதல்

பெரியபுராணம் தமிழ் நாட்டுக் கதைமரபினைக் கொண்ட காப்பியமாகும். தமிழ் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் வாழ்ந்த பல்வேறு காலகட்டத்திற்குரிய சிவனடியார்களின் வரலாறுகளைப் பெறுவது கடினமான செயலாகும். அவர்கள் வாழ்ந்த ஒவ்வொரு ஊர்களுக்கும் சென்று தகவல்களைத் திரட்டினார். அவர்கள் வாழ்ந்த ஒவ்வொரு தலங்களுக்கும் சென்று அவர்களின் அற்புதங்களையும் பதிவு செய்தார். அநபாயச் சோழன் இதற்குப் பூரண ஆதரவு வழங்கினான். உதாரணமாக, திருஞானசம்பந்தரின் வரலாற்றினைச் சீர்காழிக்குச் சென்று சேகரித்தார். அப்பர் சுவாமிகளின் தகவல்களைப்பெற திருவீரட்டானேசுவரர் கோயிலுக்குச் சென்று, அங்கு அவர் சூலை நோய் நீங்கப்பெற்ற அற்புதத்தையும், வேதாரணியத்தில் அவர் செய்த இன்னபிற அற்புதங்களையும் சேகரித்தார். இவ்வாறு அறுபத்துமூன்று

தனியடியார்களினதும், ஒன்பது தொகையடியார்களதும் வரலாறுகளை அவர்கள் வாழ்ந்த, தரிசித்த, ஒவ்வொரு இடங்கள் பூராகவும் சென்று தேடிப்பெற்றுத் தன் காப்பியத்தைக் கட்டமைத்தார்.

சேக்கிழார், தான் தேடிப்பெற்ற அடியவர்களின் வரலாறுகளை ஒன்றாகச் சேர்த்து காவியத்திற்குரிய விதிகளுக்கு அமைவாகக் கட்டமைப்பதில் பெரும் சவாலை எதிர்கொண்டார். ஏனெனில் அவருக்கு முன் இரகுவம்சத்தைப் படைத்த காளிதாசர், அதில் ரகு மன்னன் முதல் அக்கினிமித்திரன் வரையான இருபத்திரண்டு அரசர்களின் வரலாறுகளைக் காவியக்கட்டமைப்பில் பாடியிருந்த நிலையில் அதையும் கடந்து அறுபத்துமூன்று தனியடியார்களதும், ஒன்பது தொகையடியார்களதும் வரலாறுகளை எப்படிப் பாடுவது என்ற சிக்கல் சேக்கிழாருக்கு எழுந்தது. ஆனாலும் அந்தச் சிக்கல்களை எல்லாம் உடைத்துப் பெரியபுராணம் என்ற பெரும் காப்பிய வடிவமாக எழுதினார். இது பக்தி சார்ந்த புராணம். இதற்குள் அறம், பொருள், இன்பம், வீடு எனும் நாற்பொருள்களைச் சேர்ப்பதும் பெரும் சவால் ஆகும். அதையும் வெற்றிகரமாக முடித்திருக்கிறார் சேக்கிழார்.

சேக்கிழார், சிவனடியார்களின் வரலாறுகளைத் தேடிச்சென்று, அவ்வூர் மக்கள் மத்தியில் வழங்கி வந்த பழம்மரபுக் கதைகளைக் கேட்டறிந்தார். வாய்மொழிக்கதைகள், கல்வெட்டுக்கள் என்பவற்றில் இருந்து தகவல்களை எடுத்தார். மேலும், ஏடுகளையும் பெற்றுக்கொண்டு, தான் சேகரித்த நாயன்மார்களது வரலாற்றுத் தகவல்கள் சரியானதா? எனப்பார்த்துப் பெரியபுராணத்தை எழுதினார். இதனால் நாயன்மார்களது வரலாற்றுச் செய்திகள் சரியானவையாகப் பதிவுசெய்யப்பட்டன. இதன்பின் பெரியபுராணம் ‘வரலாற்றுப் புராணமாகப்’ பார்க்கும் மரபுக்கு வந்தது. இறையடியவர் பலரின் வரலாறுகளைக் கூறும் வரலாற்றுக் காவியம் என்று பெரியபுராணத்தைக் கூறலாம். குரு வழிபாடு செய்து முத்தி பெற்ற சம்பந்தர், அப்பர், திருமூலர், குலச்சிறையார், அப்பூதியடிகள், மங்கையக்கரசியார் முதலியோரும், சிவலிங்க வழிபாட்டின் மூலம் முத்தி பெற்ற கண்ணப்பர், சண்டேசுவரர், சாக்கிய நாயனார் முதலியோரும், சங்கம வழிபாட்டின் மூலம் முத்தி பெற்ற திருநீலகண்டர், இளையான் குடிமாற நாயனார், இயற்பகை நாயனார், காரைக்கால் அம்மையார் முதலிய சிவனடியார்களின் வரலாறுகள் மிகவும் சிறப்பாகப் பேசப்பட்டுள்ளன.

### பக்தியை முதன்மைப்படுத்துதல்

மக்களுடைய உணர்ச்சிகள், என்றும் ஒரே நிலையானவை அல்ல. காலத்திற்குக் காலம் உணர்ச்சிகள் மாறுபடும். தொல்காப்பியர் காலத்தில் மக்கள் எட்டு சுவைகளைக் கொண்டிருந்தனர். வடமொழியாளர்கள், ஒருணர்ச்சியும் இல்லாமல் அமைதியாக இருத்தலைச் சாந்தம் எனக்கூறி அதையும் ஒரு சுவையாக்கினர். பின்னர் இறைவனையும், இறைவனுடைய

தொண்டர்களையும் அறிந்து கொள்வதிலும், அவர்களைப் பற்றிக் கூறுவதிலும் மக்கள் சுவை கண்டனர். இது பக்தி எனப்பட்டது. இதையொட்டியே பக்தி இலக்கியங்கள் எழுந்தன. இது பக்தியை அடிப்படையாகக் கொண்டிருந்தமையால் பக்திச் சுவை எனப்பட்டது. ஏனைய சுவைகளை எல்லோரும் எளிதில் துய்க்க முடியும். பக்திச் சுவையினைப், பக்தி அனுபவம் உள்ளவர்கள் மட்டுந்தான் துய்க்கமுடியும். அதனால்தான் எல்லாச் சுவையினும் பக்திச் சுவை மேம்பட்டதாகத் திகழ்கின்றது. கடவுளிடம் காட்டும் அன்பு பக்தியாகும். குழந்தை - தாயிடம் காட்டும் அன்பும், பக்தர்கள் - இறைவனிடம் காட்டும் அன்பும் ஒன்றுதான். ஆனால் பக்தர்கள் அவ்வன்பினைக் காட்டும்போது அது உச்சநிலைக்குச் சென்று உருமாறிப்பக்தியாகப் பரிணமிக்கிறது. இந்தப்பக்தியினைத்தான் சேக்கிழார், அடியவர்கள் வாயிலாகக் காட்டுகின்றார்.

நாயன்மார்களின் வரலாறுகள் பேசப்பட்டாலும், பூடகமாகவும், வெளிப்படையாகவும் சைவபக்தியே இக்காப்பியத்தில் முதன்மை பெறுகிறது. ஒவ்வொரு அடியவர்களின் அற்புதங்களைப் பேசும்போதும் இறைவனின் அருட்கொடையும் பேசப்படுகின்றது. அதுமட்டுமன்றி காப்பியத்தில் நவரசம் இருக்கவேண்டியது அவசியமாகும். இங்கு பக்தியையும் இணைக்க வேண்டிய முக்கியம் காணப்படுகின்றது. இது பெரும் சவால் ஆகும். அதேவேளை உலகியல் இன்பங்களைப் பாடக்கூடிய இடங்களில் கூட அதனை ஆன்மீகத்தோடு இணைத்துப் பாடுகின்றார் சேக்கிழார். உதாரணமாக,

> “கற்பகத்தின் பூங்கொம்போ காமன்தன் பெருவாழ்வோ
> பொற்புடைய புண்ணியத்தின் புண்ணியமோ புயல்சுமந்து
> விற்குவளைப் பவளமலர் மதபுத்த விரைக்கொடியோ
> அற்புதமோ சிவனருளோ அறியேன்..” (திருத்தொண்டர் புராணம்: 286)

எனச் சுந்தரர், பரவையாரைக் கண்டதும் பக்தி குலையாது தெய்வீகத்தோடு ஒப்பிட்டுத் தன் நோக்கத்தைப் பாடிக்கடக்கின்றார். இங்கு உலகியல் ரீதியான எந்தப் பொருளையும் உவமையாகக் காட்டவில்லை. இறைவன் மேல் அன்பு செலுத்துவதன் மூலம் உலகப் பற்றுக்களில் இருந்து விடுபட்டு முக்தி அடையலாம் என்ற உயர் பக்தியின் இலட்சியமும் பேசப்படுகின்றது. மேலும், கழறிற்றறிவார் நாயனார் நகர்வலம் வந்தபோது எதிரே வண்ணான் வரக்கண்டார். மழையிற் கரைந்த உவர் மண், ஊறி மேனி வெளுத்த அவ்வண்ணானைத் திருநீறு பூசிய அடியார் என்று கருதி கழறிற்றறிவார் நாயனார் பக்தியால் வணங்கிய தன்மையை கழறிற்றறிவார் நாயனார் புராணத்தில் காணமுடியும். (கழறிற்றறிவார் நாயனார் புராணம் - 19).

### பண்பாட்டுக் காப்பியமாக்குதல்

சேக்கிழார், தமிழ்நாட்டில் பல்வேறு பிரதேசங்களில் வாழ்ந்த நாயன்மார்களின் வரலாற்றினூடாகப் பண்பாட்டைப் பேசுகிறார். வெவ்வேறு பிரதேசம், வெவ்வேறு தொழில்,

வெவ்வேறு குலங்களில் வாழ்ந்த மக்களின் அந்தந்தப் பண்பாட்டுப் பின்புலங்களைத் தொகுத்துத் தந்துள்ளார். உதாரணமாக, கண்ணப்ப நாயனாரின் வரலாறுகளைப் பேசும்போது திருக்காளத்திமலையின் அழகு, அங்கு வாழும் வேடர்களின் வாழ்வியல் என்பன பேசப்படுகின்றன. குறிப்பாக, அவர்கள் வேட்டையாடப் போகும்போது அவர்களின் செயற்பாடுகள் மற்றும் அவர்களின் தொழில் நடவடிக்கைகள் என்பன பன்னிரண்டு பாடல்களில் கூறப்பட்டுள்ளன. தமிழ்நாட்டின் வெவ்வேறு பிரதேசம், வெவ்வேறு தளங்களில் வாழ்ந்த மக்களின் பண்பாடுகளைத் தெட்டத்தெளிவாகச் சொல்லிக்கொண்டு போகிறார் சேக்கிழார். இதுவே காவியத்திற்குத் தனிச்சிறப்பு எனலாம். பெரிய புராணம் கூறும் சிவனடியார்கள் ஒரே காலம், ஒரே இடம், ஒரே தொழில், ஒரே குலம் சார்ந்தவர்கள் இல்லை. எத்தனை வேறுபாடுகள் இருந்தாலும் இவர்கள் அனைவரும் 'சிவத்தொண்டர்கள்' என்ற ஒற்றுமை உடையவர்கள். இதுவே பெரியபுராணப் பண்பாட்டின் தனிச்சிறப்பாகும். இதனையே திருநாவுக்கரசர், "ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்… அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே" என்கிறார்.

## சைவதத்துவ மரபுகளை வலியுறுத்துதல்

பெரியபுராணத்தின் இறைக்கொள்கை பெரியபுராணத்தின் முதற்பாடலிலேயே வரையறுக்கப்பட்டுள்ளது.

"உலகெலா முணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்" (பெரியபுராணம்: 01)

என்ற இப்பாடலில், இறைவனின் முத்திருமேனிகளும், ஐந்தொழில்களும் பேசப்பட்டுள்ளன. 'சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்' என்பதில் சைவசித்தாந்தத் திருவடிவப்பேறாகிய முத்தி தத்துவத்தையும் சேக்கிழார் புலப்படுத்துகின்றார் (வேதநாதன், மா., 2011:08). மேலும், மும்மலக் கொள்கை, வினைக் கொள்கை, குருலிங்க சங்கம வழிபாடு, இருவினையொப்புக் கொள்கை, சமயப் பண்பாடு, கடவுளர் வழிபாடு, கல்வி மரபுகள், கலைப்பண்பாட்டு மரபுகள், பெண் தெய்வ மரபு முதலிய சைவப் பண்பாட்டு மரபுகளையும், விழுமியங்களையும் வெளிப்படுத்தும் கருவூலமாகப் பெரியபுராணம் படைக்கப்பட்டுள்ளது. சேக்கிழார் இவற்றினை எடுத்துக்காட்டுவதன் மூலம், இறுதியில் இறைவனை அடைந்து பேரானந்தத்தை அனுபவிப்பதே ஆன்மாக்களின் இறுதி இலட்சியம் என்பதனை நிரூபிக்கின்றார்

## காப்பிய இலக்கணங்களைக் கையாளுதல்

தன்னிகரில்லாத தலைவனை உடையதாய், அவனது பிறப்பு, வளர்ப்பு, கல்வி, முடிபுனைதல், திருமணம், தூதனுப்புதல், பகைவருடன் போர் செய்து வெல்லல், நன்மக்களைப் பெறுதல் முதலிய அவனுடைய பல்வேறு வாழ்க்கைப் பகுதிகளையும் அவனுடைய நாடு, வளநகர் போன்றவற்றையும் நிலம், கடல், மலை, திங்கள், முதலியவற்றையும் வர்ணனை முறையில் பாடிச்சென்று, படலம், இலம்பகம், சருக்கம் முதலிய பல்வேறு பிரிவுகளை உடையதாய்ச் செம்மார்ந்த நடையால் இயற்றப்படுவது காப்பியம் என்கிறது தண்டியலங்காரம். பெரியபுராணம் பல நாயன்மார்களைச் சொல்லும் புராணமாக இருப்பினும், திருத்தொண்டர் தொகையை முதல் நூலாகவும், திருத்தொண்டர் திருவந்தாதியை வழிநூலாகவும் கொண்டு ஒரு சைவப் பண்பாட்டு இலக்கிய மரபில் படைக்கப்பட்டுள்ளது. இந்நூல் 02 காண்டங்களையும், 13 சருக்கங்களையும், 78 புராண உட்பகுப்புக்களையும், 4286 திருவிருத்தங்களையும் கொண்டதாகப் படைக்கப்பட்டுள்ளது (வேதநாதன். மா, 2011 : 04).

இக்காப்பியத்தில் தன்னிகரில்லாத் தலைவன் போற்றப்படுகின்ற தன்மையைக் காணலாம். சம்பந்தரா? சுந்தரரா? சிவனா? பாட்டுடைத்தலைவர்கள் என்ற கேள்வி எழுகின்றபோது ஒவ்வொருவரும் ஒவ்வொரு கருத்துக்களைக் கூறுகின்றனர். பெரியபுராணத்தில் சம்பந்தருக்குத்தான் அதிக எண்ணிக்கைகொண்ட பாடல்களைச் (1256 பாடல்கள்) சேக்கிழார் பாடியுள்ளார். காப்பியத்தின் இரண்டாங் காண்டத்தின் முதன் நாயன்மாராகச் சம்பந்தர் அமைந்துள்ளார். அற்புதங்கள் பல புரிந்துள்ளார். சமணர்களோடு போரிட்டுச் சைவசமயத்தை உயர்த்தியுள்ளார். இதனால் மறைமுகமாகச் சம்பந்தரே பாட்டுடைத் தலைவன் என்பர். ஆனால் காவியத்தின் ஆரம்பம் முதல் இறுதி வரை இவர் விரவி வரவில்லை. இடையிலே தோன்றி இடையிலேயே இவர்புராணத்தோடு நின்றுவிட்டார். இதனால் இவர் காவியத்தலைவர் இல்லை என்றும் கூறுவோர் உளர்.

‘அறம், பொருள், இன்பம், வீடடைதல் நூற்பயனே’ என்பதன்படி, இந்நான்கு உறுதிப்பொருள்களும் இப்புராணத்துள் விரவி வந்துள்ளன. இங்கு அறம், பொருள், இன்பம், வீடு என்ற வகையில் சுந்தரரின் வாழ்க்கை பேசப்படுகின்றது. இளவயது அரண்மனை வாழ்வு, திருமணம், வீடுபேறு என முழுமையையும் அனுபவித்தவர். இங்கு சுந்தரரின் பிறப்புக்கு முன்னைய கதை தொடக்கம் பிறப்பு முதல் வீடுபேறுவரையும் கூறப்பட்டுள்ளன. இங்கு சுந்தரர் புராணமே தலைமைக் கதை எனலாம். சுந்தரரின் பிறப்புப் பற்றி சேக்கிழார் கூறும்போது,

> “மாதொருபாகனார்க்கு வழிவழி அடிமை செய்யும்
> வேதியர்குலத்துள் தோன்றி மேம்படு சடையனார்க்கு
> ஏதமில்கற்பின் வாழ்க்கைமனை இசைஞானி யார்பால்
> தீதகன்றுலகம் உய்யத்திரு அவதாரஞ் செய்தார்” (பெரிய புராணம்: 149)

என்று சிறப்பிக்கிறார். பெரியபுராணத்தின் முதல், இடை, கடையில் சுந்தரரின் வரலாறு பேசப்படுவதால் இவரே காவியத்தலைவன் என்பர் சிலர். 63 நாயன்மார்களையும் சிவனே இயக்குகின்றார் ஆதலால் சிவனே தலைவன் என்கிறார்கள் சிலர். சுருங்கக் கூறினால், பலரைப் பற்றிய புராணங்களைக் கொண்ட தொகுப்பு ஒரே தலைவனைக் கொண்டு இயற்றப்படவில்லை ஆதலால் இது காப்பியமாகாது என்று ஒரு சாராரும், சுந்தரரே தலைவர். ஆலால சுந்தரர் திருவாரூர் சுந்தரராக வாழ்ந்து கயிலையை அடைவதே இக்காப்பியத்தின் நிகழ்ச்சி ஆதலால் இது காப்பிமாகும் என்று ஒருசாராரும் வாதிடுகின்றனர். ஆயினும் இலக்கிய ரீதியாகப் பார்ப்பவர்கள் சுந்தரரையும், சமயரீதியாகப் பார்ப்பவர்கள் சிவனையும் பாட்டுடைத் தலைவர்களாகப் போற்றுகின்றனர்.

பெரியபுராணத்தைக் கடவுள் வாழ்த்தோடு தொடங்குகிறார் சேக்கிழார். இது காவியத் தொடக்கத்தைக் காட்டுகின்றது.

“உலகெலா முணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்” (பெரியபுராணம்: 01)

என்று இறை வணக்கத்தோடு காப்பியத்தை ஆரம்பிக்கிறார். ‘உலகெலாம்’ என்று தில்லைக் கூத்தன் அடியெடுத்துக் கொடுத்த முதற்பாட்டிலேயே ‘வணங்குவாம்’ என்பதனால் தெய்வ வணக்கமும், ‘வாழ்த்தி’ என்பதனால் வாழ்த்தும் கூறப்பட்டன. ‘மலர்சிலம்படி வாழ்த்தி’ என்பதனால் இறைவன் திருவடியையே பற்றுக்கோடாகக் கொண்டு வாழ்ந்து உய்ந்த அடியார்களைக் குறிப்பதாக ‘வருபொருள் உரைத்தல்’ எனும் நிலைப்பாட்டில் அடியார்களின் வரலாறுகள், பெருமைகள் கூறப்படுகின்றன.

மேலும், கயிலை மலையின் வர்ணனை, சோழநாட்டு வர்ணனை, திருவாரூர் வர்ணனை, காளத்திமலை வர்ணனை, கடல், காலை, மாலை வர்ணனைகள் என்பனவும் இடம்பெற்றுள்ளன. உதாரணமாக,

“குன்றவர தனில்வாழ்வார் கொடுஞ்செவி ஞமலியார்த்த
வன்திரள் விளவின்கோட்டு வார்வலைமருங் குதூங்கப்
பன்றியும் புலியும்எண்கும் கடமையும்மானின் பார்வை
அன்றியும் பாறைமுன்றில் ஐவனம்உணங்கும் எங்கும் (பெரியபுராணம்: 652)

எனக் காளத்திமலையடிவாரக் காட்சிகளை வர்ணிக்கிறார் சேக்கிழார்.

மணம் முடித்தல், காதல் நிகழ்ச்சிகள், முடிசூட்டுதல், தூது, போர், வெற்றி என்பனவும் பேசப்படுகின்றன. தடுத்தாட்கொண்ட புராணத்தில் காதல் நிகழ்ச்சிகள், மணம், தூது முதலிய

பல விடயங்கள் பேசப்படுகின்றன. காவியத்துள் அகப்பொருள்துறை இருத்தல் வேண்டும். இதனை நம்பியாரூரரின் வாழ்க்கையினூடாகச் சேக்கிழார் கூறியுள்ளார். பூம்பொழில் நுகர்தல், புனல் விளையாடல், புலவியிற் புலத்தல், கலவியிற் கலத்தல் முதலிய காவிய உறுப்புக்களை, ஆரூரரின் வாழ்க்கையில் அழகுபடக் கூறியுள்ளார். கலவி விரும்பிய நம்பியாரூரருக்காகப் புலவி கொண்டிருந்த பரவையார்பால் மாலும், அயனும் காணாதாருமாகிய இறைவன் தூது சென்றார். இறைவனையே தூதனுப்பிய செய்தியை இக்காவியத்தில்தான் காணமுடிகின்றது.

பாவிகம் என்பது காப்பிய உறுப்புக்களைக் கட்டுக்கோப்பாக இணைத்து வைத்திருப்பதாகும். உதிரியாகக் காணப்பட்ட நாயன்மார்களின் வரலாறுகள் ஒன்றாகச் சேர்த்து, ஒரு கட்டுக்கோப்புக்குள் கொண்டு வந்து பாடப்பட்டுள்ளன. காவியத்தின் ஒருமைப்பாட்டிற்கு முரணடையாமல் கட்டமைக்கப்பட்டுள்ளன. 63 நாயன்மார்களின் வரலாறுகளையும் ஒன்றாகச் சேர்த்துப் பாவிக மரபு குறையாமல் வடமொழி மரபு, தமிழ்மொழிமரபு என்பவற்றையும் இணைத்து ஒரு புதிய காவியமாகச் சேக்கிழார் பாடியுள்ளார். இங்கு ஒவ்வொரு அடியவர்கள் வாழ்ந்த தலங்களும், இறைவனின் அருட்கொடைகளும் பேசப்பட்டுள்ளன. தலங்களின் வரலாறு, ஐதீகக் கர்ணபரம்பரைக் கதைகள், இறைவனின் பெருமை என்பவை கூறப்பட்டுள்ளன. மூர்த்தி, தலம், தீர்த்தம் என்பவற்றையும் காவியப் பண்போடுகூறி, ‘ஒரு காவிய ஆக்கம்’ என்பதற்கு வழிகாட்டியாகப் பெரியபுராணத்தை அமைத்துள்ளார் சேக்கிழார். இது பிற்காலத் தலபுராண மரபிற்கும் வழிகாட்டியாக அமைந்துள்ளது. இவ்வாறு ஒரு காவியத்திற்குரிய புதுமையான, பொதுமையான பண்புகளை இப்புராணம் மூலம் சேக்கிழார் அறிமுகம் செய்துள்ளார் எனலாம்.

### இலக்கியச் சிறப்புக்கள்

இலக்கியத்தில் இன்பந்தருவன அதன்கண் இடம்பெற்ற சிறப்பான பகுதிகளேயாம். இலக்கியத்தில் கையாளப்பட்ட எல்லாத் தொடர்களும், சொற்களும் இன்பத்தை நல்கா என்பது ஓரளவு உண்மையாயினும், சில தொடர்கள், சில சொற்கள் மட்டும் சிறப்புடைய பகுதிகளாக இருந்து இன்பத்தை அளிக்கும். சேக்கிழார் பெரியபுராணத்தைப் பக்திக் காவியமாகப் படைத்த போதிலும் அதனுள் இலக்கியச் சிறப்புக்களைக் காட்டத் தவறவில்லை. இன்றுவரை பெரியபுராணம் பேசுபொருளாக இருப்பதற்கு அதன் இலக்கியச் சுவைகளே காரணம் எனலாம். பஞ்சபுராணத்தில் ஒன்றாகப் பாடப்படுவது தமிழ்ச்சைவ மரபுக்குக் கொடுத்த சிறப்பாகும். புராணபடனம் மற்றும் பாராயணம் செய்யும் மரபும் காணப்படுகின்றது. இவற்றிற்குக் காரணம் பெரியபுராணத்தின் இலக்கியச் சிறப்புக்களாகும்.

**கற்பனை வளம்**

கற்பனை, இலக்கியத்திற்கு உயிர் எனலாம். கற்பனை என்பது புலன்கள் நேரே ஒரு பொருளை அனுபவியாத காலத்திலும் அந்தப் பொருளை நினைவிற்குக் கொண்டுவந்து அப்பொருளிடத்து மீண்டும் அனுபவத்தை ஏற்றவல்ல ஒருவகையாற்றல் ஆகும். இதனைச் சிந்தனையும், காட்சியும் கலந்த ஒருவகைக் கூட்டுத் திறன் என்று கூறலாம். இக்கற்பனையே பல அணிகளுக்குத் தாயாகும். கலைகளின் சிறப்பிற்கு இன்றியமையாததாக, அடித்தளமாக இருப்பது கற்பனை ஆகும். கற்பனையின்றி இலக்கியத்தின் மூலம் உணர்ச்சியை உண்டாக்க வியலாது. உணர்ச்சிக்கு அடிப்படை கற்பனையே. (பரமசிவம்.சொ, 1987 : 11 - 12). இங்கு உண்மையான வரலாற்றுக் கதைகளைக் கற்பனையுடன், கற்பனைச் சுவையுடன் சேக்கிழார் பாடியுள்ளமை சிறப்புக்குரியது. இதனைப் பின்வரும் பாடலடிகளில் காணலாம்.

"பஞ்சின் மெல்லடிப் பாவைய ருள்ளமும்
வஞ்ச மாக்கள் தம்வல்வி னையும்பரன்
அஞ்செ ழுத்தும் உணரா அறிவிலோர்
நெஞ்சும் என்ன இருண்டது நீண்டவான்" (பெரியபுராணம்: 305)

இப்பாடலின் மூலம், மனதில் வஞ்சகம் கொண்டவர்களின் முகம் எப்போதும் இருண்டு போய்க் கிடக்குமாம். அதுபோல சிவனின் ஐந்தெழுத்தை உணராதவர்களின் மனமும், அறிவும் இருண்டுபோய் இருக்கம். இப்படிப் பரந்த வானமும் மழை பெய்யும் நேரத்தில் இருண்டது போல் உள்ளது என்று கற்பனை நயத்துடன் கூறுகிறார் சேக்கிழார்.

"மறுவில் சிந்தையவன் தொண்டர் வருந்தினால்
இறுமருங் குலார்க்கியார் பிழைப்பார் என்று
நறுமலர்க் கங்குல் நங்கைமுன் கொண்டபுன்
முறுவல் என்ன முகிழ்த்தது வெண்ணிலா" (பெரியபுராணம்: 306)

என்ற பாடலினூடாக, நல்ல வாசனையை உடைய மலர்களைச் சூடிய, அந்தக் கங்குலாகிய நங்கை முகத்தில் கொண்ட புன்னகை போல, வானத்தில் வெண்ணிலா மலர்ந்தது என்கிறார். பெண் சிரித்த சிரிப்பு வெண்ணிலா மலர்ந்தது போல் இருந்ததாம்.

"தோற்றும் மன்னுயிர் கட்கெலாந் தூய்மையே
சாற்றும் இன்பமும் தண்மையும் தந்துபோய்
ஆற்ற அண்டமெலாம் பரந்த ண்ணல்வெண்
நீற்றின் பேரொளி போன்றது நீள்நிலா" (பெரியபுராணம்: 308)

என்பதன் மூலம், அந்தச் சிவனின் உடலில் உள்ள வெண்ணீற்றின் நிறத்தினைப்போல நீண்ட வானத்தில் தெரியும் நிலவின் ஒளியும் காணப்படுகின்றது என்கிறார் சேக்கிழார். இவை பக்தி இலக்கியத்திற்கு அப்பால் இலக்கியச் சுவையின் மிகுதியைக் காட்டுகின்றன.

### வர்ணனைகள்

காப்பியத்தில் வர்ணனைகள் இடம்பெறுவது இயல்பானதாகும். குறிப்பாகப் பெரியபுராணத்தில் இவ்வம்சங்கள் சிறப்பாகவே கையாளப்பட்டுள்ளன. உதாரணமாகக், கயிலை மலை வர்ணனைகள், சோழநாடு பற்றிய வர்ணனைகள், காலை, மாலைப் பொழுதுகள் பற்றிய வர்ணனைகள், காட்டு வர்ணனைகள், ஊர் வர்ணனைகள், கடல் வர்ணனைகள் என்பனவும் சேக்கிழாரால் பாடப்பட்டுள்ளன.

"காலைஎழும்பல் கலையினொலி களிற்றுக்கன் றுவடிக்கும்மொலி
சோலைஎழுமென் சுரும்பினொலி துரகச்செருக்காற் சுலவுமொலி
பாலைவிபஞ்சி பயிலுமொலி பாடலாடல் முழவினொலி
வேலையொலியை விழுங்கிஎழ விளங்கியோங்கும் வியப்பினதால்"
(பெரியபுராணம்: 3754)

என்ற பாடலில், சிறந்த காலைக்காட்சி வர்ணனைகளைக் காணமுடிகின்றது. இறுதிச்சீர் 'ஒலி ஒலி' என வரும் சொற்சிறப்பு உடையதாகக் காணப்படுகின்றமையும் சிறப்புக்குரியது.

### சொல்லாட்சிச் சிறப்புக்கள்

பொருத்தமான சொற்களைப் பொருத்தமான இடங்களில் தக்கவாறு ஆளுவதுதான் சொல்லாட்சியாகும். பாட்டில் சொற்களை அமைக்கும் போது வன்மையான, உணர்ச்சிக்கு வேண்டிய இடத்தில் வன்மையான சொற்களையும், மென்மையான உணர்ச்சிக்குரிய இடங்களில் மென்மையான சொற்களையும், இனிமையும், குழைவும் மிக்க இடங்களில் ஈரமுள்ள மென்மையான சொற்களையும் பயன்படுத்த வேண்டும். இலக்கியத்தில் பேசும் பாத்திரத்தின் தேவை, ஆற்றல் ஆகியவற்றிற்குத் தக்கவாறு சொற்கள் அமைய வேண்டும். பெரியபுராணத்தில் சேக்கிழார் சொற்களைத் தேர்தெடுத்துப் பயன்படுத்தி உள்ளார். அந்தளவிற்குச் சொல்லாட்சி அமைந்துள்ளது. சுந்தரர், முற்பிறப்பின் தொடர்பால் பரவையாரைக் காணும்போது அவளின் அழகைப் பாடுவதாகச் சேக்கிழார் எழுதுகிறார்.

"கற்பகத்தின் பூங்கொம்போ காமன்தன் பெருவாழ்வோ
பொற்புடைய புண்ணியத்தின் புண்ணியமோ புயல்சுமந்து
விற்குவளை பவளமலர் மதிபூத்த விரைக்கொடியோ
அற்புதமோ சிவனருளோ அறியேன்.." (பெரியபுராணம் - 286).

இப்பாடலிலே பரவையாரின் அழகு கற்பகத்தின் பூங்கொம்பிற்கு ஒப்பிடப்படுகின்றது. காமன் தன் கையால் செய்து உருவாக்கிய பெண்ணோ? புண்ணியங்கள் சேர்ந்து ஒன்றாக வந்ததோ? பவள மலர்கள், சந்திரன் எல்லாம் ஒன்றாகச் சேர்ந்து வந்த கொடி போன்ற பெண்ணோ? இவள் அற்புதமோ? உண்மையான பெண்ணோ? சிவனின் அருளால் வந்தவளோ? என்றெல்லாம்

அவளைச் சுந்தரர் வியந்து பாடுகின்றார். இவை சேக்கிழாரின் சொல்லாட்சிச் சிறப்பினை வெளிப்படுத்துகின்றன.

மேலும், சொல் விளையாட்டின் மூலம் எண் பெயர்களைத் தருகிறார் சேக்கிழார். ஒன்று, இரண்டு, மூன்று என ஏழு வரையான எண்பெயர்களையும் பாடல்களில் தந்து இலக்கியச் சிறப்பினை வெளிப்படுத்துகின்றார். இதனைக் கீழ்வரும் பாடலில் காணலாம்.

"செம்மை வெண்ணீற் றொருமையினார் இரண்டுபிறப்பின்
சிறப்பினார், மும்மைத்தழ லோம்பியநெறியார் நான்குவேதம்
முறைபயின்றார், தம்மைஐந்து புலனும்பின் செல்லும்தகை
யார்அறுதொழிலின், மெய்ம்மை ஒழுக்கம் ஏழுலகும்போற்
றும்மறையோர் விளக்குவது" (பெரியபுராணம்: 212)

என்ற பாடலில், ஒருமையினர், இருபிறப்பு, மும்மைத்தழல், நான்கு வேதம், ஐந்துபுலன், அறு தொழில், ஏழ் உலகம் என ஒன்று முதல் ஏழு வரையான எண் பெயர்கள் கூறப்பட்டுள்ளன. அதாவது, செம்மை சார்ந்த வெண்ணீறு பூசுபவர், இரண்டு பிறப்பாளர், வேதமறிந்த பிராமண குலத்தில் வந்து மூன்று நேரங்களிலும் வேள்வி செய்து வாழ்பவர், நான்கு வேதங்களை நன்கு அறிந்தவர், ஐம்புலன்களை அடக்கியவர், ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல் உள்ளிட்ட அறுவகைத் தொழிலில் ஈடுபடுபவர், ஏழு உலகும் போற்றும் சிறப்புடைய ஊர், சண்டேசுவரர் வாழும் ஊர் என்று சொல்கிறார் சேக்கிழார். இவ்வாறு எண்பெயர்களினூடாக ஊரின் பெருமையினை வெளிப்படுத்துகின்றார் சேக்கிழார்.

### அணிப்பயன்பாடுகள்

இலக்கியச் சிறப்புகளில் மிக முக்கியமானது அணிப்பயன்பாடாகும். கவிஞர்கள் தம் கருத்துக்களைத் தெளிவாகவும், விளக்கமாகவும் உரைப்பதற்குத் துணையாக இருப்பவை அணிகள். கவிஞர்கள் சில பொருள்களைப் பற்றிப் பாடும்போது அணிகள் தாமாகவே வந்து அவற்றில் இடம்பெற வேண்டும். அதுவே காப்பியத்திற்கு அழகு சேர்க்கின்றது. உதாரணமாக,

"பேர்பரவை பெண்மையினில் பெரும்பரவை விரும்பல்குல்
ஆர்பரவை அணிதிகழும் மணிமுறுவல் அரும்பரவை
சீர்பரவை ஆயினாள் திருவுருவின் மென்சாயல்
ஏர்பரவை இடைப்பட்ட என்னாசை எழுபரவை" (பெரியபுராணம்: 294)

என்ற பாடலில், பின்வருநிலை அணியைக் காணலாம். இங்கு பரவை ஏழு இடத்தில் வேறுபட்ட பொருள்களைத் தருகின்றது. ஒருவர் பெயர், தேவர் அவை, வாழ்த்தும் தெய்வம், முல்லை அரும்பு, பரப்பளவு, கூந்தல், கடல் என்ற ஏழு பொருள்களில் வரும்படியாகப் பாடுகின்றார். மேலும், கற்பனை வளம் மிக்க பாடல்களில் உவமை, உருவக அணிகளை அதிகமாகவும் சேக்கிழார் பயன்படுத்தியுள்ளார்.

சோழநாட்டு வளத்தினைப் பாடுங்கால், மருதநிலக்காட்சியை உவமைச்சிறப்புக்களோடு சேக்கிழார் பின்வரும் பாடலினூடாகப் பாடியுள்ளார்.

> "பத்தியின் பாலராகிப் பரமனுக் காளாம் அன்பர்
> தத்தமிற் கூடினார்கள் தலையினால் வணங்குமாபோல்
> மொய்த்தநீள் பத்தியின்பால் முதிர்தலை வணங்கிமற்றை
> வித்தகர் தன்மைபோல் விளைந்தன சாலியெல்லாம்" (பெரியபுராணம்: 72).

இப்பாடலிலே, நெற்பயிர்கள் எல்லாம் சூழ்கொண்டிருந்தன. சூல் முதிர்ந்து, நெல்மணிகளைக் கொண்ட சுருள் வெளியே வந்து, பின் அலர்ந்தது. இக்காட்சி சேக்கிழாருக்குச் சைவ அன்பர்களை நினைப்பூட்டியது. இது அன்பர்களுடைய மனம் இறைவனை நோக்கி மலர்ந்ததுபோல் இருந்தது என்றார். மணிகள் எல்லாம் முற்றிய பின்பு தலைசாய்ந்தன. இக்காட்சியினைத் திருத்தொண்டர்கள் ஒருவரை ஒருவர் கண்டு வணங்கிய செயலுக்கு ஒப்பிட்டுள்ளார். இவ்வாறு பல அணிநலன்கள் விரவிய காப்பியமாகவே சேக்கிழார் பெரியபுராணத்தைப் படைத்துள்ளார்.

**முடிவுரை**

பெரியபுராணம் குறிப்பிட்ட காலகட்டத்தின் சமூகத் தேவையைப் பூர்த்தி செய்யும் பொருட்டுத் தோன்றினாலும், அதைப் பக்தி மரபு சார்ந்து காப்பியக் கட்டமைப்பினுள் கொண்டுவருவதில் சேக்கிழார் வெற்றி பெற்றுள்ளார். தமிழ்நாட்டுச் சமூகப் பின்புலத்துடன் வரலாற்றுப் போக்கில் இக்காவியத்தைப் படைத்துள்ளார். இதன் மூலம் தான் கூறவந்த நோக்கத்தையும் (முத்தியின்பம்) அடியார்களின் வாழ்க்கை நெறிமூலம் கூறி, சைவதத்துவ உண்மையையும் நிலைநாட்டியுள்ளார். சேக்கிழாரின் நோக்கம், ஒருவர் கடவுளை வணங்குவதால் மாத்திரம் முத்தி பெறலாம் என்பதில்லை. கடவுளின் மீது தீராத காதல் கொண்ட அடியார்களை வணங்குவதன் மூலமும் முத்தி அடையலாம் என்பதை வலியுறுத்துவதாகும். இது ஒரு பக்திக் காப்பியமாகத் திகழ்ந்தாலும், இலக்கியச் சிறப்புக்களை உடையதாய், கற்பனை வளம், வர்ணனைச்சிறப்பு, சொல்லாட்சிச் சிறப்பு, அணிப்பயன்பாடு முதலியவை ஒருமிக்கும் வரலாற்றுக் காப்பியமாகப் படைத்துத் தன் காப்பிய ஆளுமையைச் சேக்கிழார் வெளிப்படுத்தி உள்ளார். எனவே காப்பிய உலகில் எப்போதும் சேக்கிழாருக்கென்று ஒரு தனிச்சிறப்பு உண்டு. இலக்கியப் படைப்பாளிகளை முன்னிறுத்தி இதுபோன்ற மேலும் பல ஆய்வுகள் ஆய்வாளர்களால் முன்னெடுக்கப்படவேண்டும் என்றும் இவ்வாய்வு பரிந்துரை செய்கின்றது.

## உசாத்துணை நூல்கள்


இராசமாணிக்கனார்.மா, (1948), ***பெரியபுராண ஆராய்ச்சி,*** மாடல் பப்ளிகேஷன்ஸ், சென்னை.

இரகுபரன்.க (பதிப்பாசிரியர்), (2017), ***திருத்தொண்டர் திருநெறி***, இந்துசமயக் கலாசார அலுவல்கள் திணைக்களம் - இந்துமத அலுவல்கள் அமைச்சு, கொழும்பு.

ஞானசம்பந்தன்.அ.ச, (1987), ***பெரியபுராணம் ஓர் ஆய்வு***, தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு, தஞ்சாவூர்.

சுப்பிரமணியபிள்ளை.கா, (1975), ***சேக்கிழார் அடிகள் வரலாறும் பெரியபுராண ஆராய்ச்சியும்***, கழக வெளியீடு, சென்னை.

சுப்பிரமணியமுதலியார்.சிகே, (1952), ***சேக்கிழார்***, சாது அச்சுக்கூடம், சென்னை.

***திருத்தொண்டர் புராணம்***, (1950), சைவ சித்தாந்த மகா சமாஜம், சென்னை.

பரமசிவம்.சொ, (1987), ***சேக்கிழாரின் இலக்கியத்திறன்***, பட்டுப் பதிப்பகம், சென்னை.

மகாதேவ முதலியார்.வா, (1970), ***பெரியபுராண ஆராய்ச்சி***, திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை.

மனோன்மணி.ச (தொகுப்பாசிரியர்), (2010), ***பெரியபுராணம் காட்டும் வாழ்வியல்***, குமரன் புத்தக இல்லம், கொழும்பு.

வேதநாதன்.மா, (2011), ***பெரியபுராணம் புலப்படுத்தும் தத்துவமும் பண்பாட்டு மரபுகளும்***, யாழ்ப்பாணப்பல்கலைக்கழக வெளியீடு, யாழ்ப்பாணம்.